

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு மற்றும் மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் ஆகியோர் நேற்று முன்தினம் (20.11.2024) சென்னை, சேத்துப்பட்டு பசுமை பூங்காவை சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் சார்பில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துவது தொடர்பாக நேரில் சென்று ஆய்வு செய்தனர். இந்த ஆய்வின்போது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி.கார்லா உஷா, சிஎம்டிஏ உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, தலைமை திட்ட அமைப்பாளர் எஸ்.ருத்ரமூர்த்தி, கண்காணிப்புப் பொறியாளர்கள் ராஜமகேஷ்குமார், பாலமுருகன் ஆகியோர் உடனிருந்தனர்.




நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் பேசினார். உடன் தாட்கோ தலைவர் உ.மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க.இராஜேந்திரன், ப.கோவிந்தராசன், இல.மேகநாதன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன், ஆரூர்மணிவண்ணன், கற்பகம்நீலமேகம் மற்றும் பலர் உள்ளனர்.

## முன்னாள் அமைச்சர் சி.வி.எம்.அண்ணாமலை 108-வது பிறந்தநாள்

### திருவுருவப்படத்திற்கு சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. - நிர்வாகிகள் மரியாதை செலுத்தினர்!

காஞ்சிபுரம், நவ. 22 -

கழக மாணவர் அணிச் செயலாளரும், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினருமான சி.வி.எம்.பி.எழிலரசனின் பாட்டனார், , முன்னாள் அமைச்சர், சி.வி.எம். அண்ணாமலை அவர்களின் 108வது பிறந்தநாளான நேற்று (20.11.2024) காஞ்சிபுரம், இரயில்வே சாலையிலுள்ள அவரது இல்லத்தில் அன்னாரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழக பொருளாளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம், மாநகராட்சி மேயர் மகாலட்சுமி, வாலாஜாபாத் வடக்கு ஒன்றியச் செயலாளர் படுநெல்லி பி.எம். பாபு, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் யுவராஜ், கழக நிர்வாகிகள் எஸ். சிகாமணி, கே.ஏ. செங்குட்டுவன், சுகுமார், கோ.எல்லப்பன், மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய கழக நிர்வாகிகள் எஸ். மாரிமுத்து, ஆர்.இளஞ்செழியன், பி.என். ரவி, எஸ்.எஸ். ஆர். சசிக்குமார், தமிழ்செல்வன், நவீன், கே.பி. இராதா கிருஷ்ணன், பி.எம்.நீலகண்டன், இராஜசேகர், தி. ராம்பிரசாத், மகேந்திரன், குடியரசு, நாத்திகம் நாகராசன், ஆ.செல்வி, ஜெ. தேவிகா, விஜயா புருஷோத்தம்மன், லலிதா, விஜயா ரவி, சுமித்ரா, வி. பழனி, திருஞானசம்பந்தம், பார்த்திபன், ஆறுமுகம், அருள்முருகன், ஜெயபால், யோகுதாஸ், உலகநாதன், மாமன்ற உறுப்பினர்கள் வ.கமலக்கண்ணன், ஷர்மிளா, கௌதமி, நிர்மலா, பூங்கொடி தசரதன், சுந்தரி, பி. சங்கர், த. விஸ்வநாதன், சரவணன், ப. சுரேஷ், எம். சங்கர், உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகள், கழக அணிகளின் நிர்வாகிகள் மற்றும் சி.வி.எம். குடும்பத்தினர் என ஏராளமானோர் அன்னாரின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி, மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

### மு.சண்முகம் எம்.பி. - கி.நடராசன் - கோ.சி.வள்ளுவன் பங்கேற்பு

## அமைப்புசாரா தொ.மு.ச. ஒருங்கிணைப்புக் கூட்டம்!

### பொதுச் செயலாளர் இரா.பொன்னுராம் அறிக்கை!

சென்னை, நவ. 22 -

அமைப்பு சாரா தொ.மு.ச. நிர்வாகிகள் கலந்தாய்வுக் கூட்டம், தொழில் ரீதியான அமைப்பு சாரா தொழிற்சங்கங்கள், புதிதாக இணைய கோரப்பட்டுள்ள தொழிற்சங்கங்களை ஒருங்கிணைப்பது தொடர்பானக் கூட்டம் நாளை மறுதினம் நடைபெறுகிறது . இதில் தொ.மு.ச. பொதுச் செயலாளர் மு.சண்முகம் எம்.பி. கலந்நது கொண்டு ஆலோசனை வழங்குகிறார். இது குறித்து அமைப்பு சாரா மாநிலச் செயலாளர் இரா.பொன்னுராம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையுடன் இணைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு அனைத்து அமைப்புசாரா தொ.மு.ச. (பதிவு எண். 3284/CNI, பேரவை இணைப்பு எண். 1000) மற்றும் தொழில் ரீதியான அமைப்புசாரா தொழிற் சங்கங்கள் மற்றும் புதியதாக இணைப்பு கோரப் பட்டுள்ள அமைப்புசாரா, கட்டுமான தொழிற் சங்கங்கள் மற்றும் தனியாக செயல்படும் கழக ஆதரவு பெற்ற அமைப்புசாரா சங்கங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து அமைப்புசாரா தொழிற்சங்க கூட்டமைப்பு ஏற்படுத்துவது தொடர்பான கலந்தாய்வுக் கூட்டம் 23.11.2024 சனிக்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் சென்னை தொ.மு.ச. பேரவை தலைமை அலுவலகமான "கலைஞரகம்" கூட்ட அரங்கில் தொ.மு.ச. பேரவைத் தலைவர் கி.நடராசன் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் எம்.பி., பேரவைப் பொருளாளர் கோ.சி.வள்ளுவன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றுகின்றனர். மற்றும் பேரவை நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

எனவே இக்கூட்டத்தில் ஏற்கனவே உள்ள அமைப்புசாரா மாவட்ட நிர்வாகிகள், இணைப்புச் சங்க நிர்வாகிகள், இணைப்புகோரியுள்ள மற்றும் கழக ஆதரவு பெற்ற அமைப்புசாரா சங்கத்தின் நிர்வாகிகள் தங்கள் சங்கத்தின் சார்பில் 3 நபர்கள் வீதம் தவறாமல் கலந்து கொள்ளுமாறு தங்களை கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:அமைப்புசாரா மற்றும் கட்டுமான தொழிற் சங்கங்கள் கூட்டமைப்பு ஏற்படுத்துவது தொடர்பாக.

இவ்வாறு அனைத்து அமைப்பு சாரா தொ.மு.ச. பொதுச் செயலாளர் இரா. பொன்னுராம் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### நாகை வருகை தரும்

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

### மாவட்டக் கழக கூட்டத்தில் தீர்மானம்! மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் அறிவிப்பு!

நாகை, நவ. 22 -

நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் நாகையில் மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.இராஜேந்திரன் தலைமை தாங்கினார். தாட்கோ தலைவர் உ.மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப. கோவிந்தராசன், இல.மேகநாதன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன், ஆரூர்மணிவண்ணன், கற்பகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானங்கள் குறித்து நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என்.கௌதமன் பேசினார்.



கூட்டத்தில் ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஆ.தாமஸ்ஆல்வாஎடிசன், செல்வ.செங்குட்டுவன், சிக்கல் என்.ஆனந்த், என்.சதாசிவம், உதயம் வே.முருகையன், சோ.பா.மலர்வண்ணன் நகரக் கழகச் செயலாளர்கள் இரா.மாரிமுத்து, மா.மீ.புகழேந்தி, எம்.ஆர்.செந்தில்குமார், பொதுக் குழு உறுப்பினர்கள் எல்.எஸ்.ஈ.பழனி யப்பன், எஸ்.பன்னீர்செல்வம், உமாசெந்தாமரை, கோசி.குமார், இல.பழனியப்பன், பேரூர் கழகச் செயலாளர்கள் க.அட்சய லிங்கம், மரியசார்லஸ், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் பி.என்.கார்த்தி, இரா.முருகையன் அ.பாரிபாலன், க. சத்திய மூத்தி, ஆர்.துரைராஜ், பால. முரளி, ஆர்.ஆர். குலோத்துங்கன், எஸ்.பால்ராஜ், கேஸ் வீ.செந்தில், பி.முருகானந்தம், வ.கமல், எம்.தினேஷ்குமார், எஸ். பாலமுருளி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டேனியல்சத்தியா, ஜி.தாமோதரன், தி.கலையரசன், ஜெ.ஆர்.கே.சுரேஷ், கு.பன்னீர்செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:-

கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசின் துணை முதல்வர், கழக இளைஞர் அணிச் செயலாளர், இந்திய அரசின் இளம் தலைவர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் 24.11.2024 அன்று நாகையில் நடைபெற உள்ள திருமண விழா நிகழ்ச்சி, துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நாகை அவுரிதிடலில் விவசாயிகள், மீனவர்கள், தூய்மை பணியாளர்கள் என 2500 பேருக்கு நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் வழங்கப்படும் நல திட்ட உதவிகள் வழங்கும் விழா, மாற்றுக் கட்சியினர் கழகத்தில் இணையும் விழா, அரசு நிகழ்ச்சிகள் என பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு நாகை மாவட்டத்திற்கு வரும் 23.11.2024 இரவு வருகை தரும் துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்களுக்கு கீழ்வேளூர் கடைத் தெருவில் மாவட்டக் கழகம் சார்பில் அளிக்கப்படும் வரவேற்ப்பு நிகழ்ச்சியில் 8,000 த்திற்கும் மேற்பட்ட கழகத்தினர் கலந்து கொள்ள செய்திடுவது என்றும் இந்த வரவேற்ப்பு நிகழ்ச்சியில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள், கழகத்தினர் பெரும் அளவில் கலந்து கொள்ள வேண்டும் என்றும், இதற்கான ஏற்பாடுகளை ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் சிறப்பாக செய்திட வேண்டும் என்றும்,

வரும் 24.11.2024ம் தேதி நாகை மாவட்டக் கழகம் சார்பில் நாகை அவுரிதிடல் கலைஞர் அரங்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மீனவர்கள், விவசாயிகள், தூய்மை பணியாளர்களுக்கு நலதிட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிக்கு தங்கள் பகுதியை சேர்ந்த பயனாளிகளையும், நாகை அவுரிதிடல் கலைஞர் அரங்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாற்றுக் கட்சியினர் கழகத்தில் இணையும் விழாவில் இணைய உள்ள மாற்றுக்கட்சியினரையும் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் முன்கூட்டியே அழைத்து வந்து அமர வைத்து விழா சிறப்பாக நடத்திட வேண்டும் என்றும்,

ஒற்றை செங்கல்லால் ஒன்றிய அரசின் முகமூடியை கிழித்து ஒன்றிய அரசை அதிர வைத்த திராவிட மாடல் அரசின் துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களுக்கு நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் பிறந்த நாள் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வது என்றும், துணை முதவல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளான வரும் 27.11.2024 அன்று நாகை மாவட்டத்தில் உள்ள அனைத்து கிளை, வார்டுகள் தோறும் கழக கொடி ஏற்றி, இனிப்புகள் வழங்கியும், ஏழை எளியவர்களுக்கு நல திட்ட உதவிகள் வழங்கியும், ஆதரவற்ற இல்லங்களில் உள்ள குழந்தைகள், முதியவர்களுக்கு புத்தாடை, உணவு வழங்கியும், மரக்கன்றுகள் நட்டும், வழங்கியும், மருத்துவ முகாம், இரத்ததான முகாம் நடத்தியும், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நோட்டு, பேனா உள்ளிட்ட எழுது பொருட்கள் வழங்கியும் சிறப்பாக கொண்டாடுவது என்றும்,

கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள், தமிழ்நாடு துளை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க தேர்தல் ஆணைத்தால் நடத்தப்பட்ட சிறப்பு வாக்காளர் சேர்ப்பு முகாம் கடந்த 16 மற்றும் 17ம் தேதியில் அதிக அளவில் கழகத்தினர், கழக ஆதராவாளர்களை வாக்காளர் பட்டியலில் சேர்ந்த கழக நிர்வாகிகள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் ஆகியோருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்வதோடு வரும் 23.11.2024 மற்றும் 24.11.2024 ஆகிய தேதிகளில் நடைபெறும் சிறப்பு முகாமில் இன்னும் சேர்க்க வேண்டிய வாக்காளர்களை சேர்த்திட வேண்டும் என்றும், வாக்காளர் சேர்த்த விவரப் பட்டியலை தலைமைக் கழகத்திற்கு அனுப்பிட வரும் 28.11.2024 அன்றுக்குள் மாவட்டக் கழகத்திடம் ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் வழங்கிட வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழாவை சேலம் கிழக்கு மாவட்டம் முழுவதும்

## கழகக் கொடியேற்றி நல உதவிகள் வழங்கி கொண்டாடுவோம்!

### மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்! எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிவிப்பு!

சேலம், நவ. 22-

சேலம் கிழக்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக கூட்டம் வாழப்பாடியில் உள்ள தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம், கலைஞர் அரங்கில் கிழக்கு மாவட்ட கழக அவைத்தலைவர் மு.ரா.கருணாநிதி தலைமையில், தலைமை கழகத்தால் அறிவிக்கப்பட்டுள்ள சட்டமன்ற தொகுதி மேற்பார்வையாளர்கள் 081 கெங்கவல்லி க.ஆனந்த், விழுப்புரம் வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், 082 ஆத்தூர் எம்.எஸ்.கணேஷ்குமார், கடலூர் மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், 083 ஏற்காடு சி.ஆனந்தகுமார், மாநில இளைஞர் அணி துணை செயலாளர், 091 வீரபாண்டி டி.கே.கிருபாகரன், ஈரோடு வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இதில் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர்கள் சுரேஷ்குமார், சின்னதுரை, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ. ஏ. ஆறுமுகம், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முனைவர் அ. சீனிவாசன், பொதுக் குழு, செயற்குழு உறுப்பினர்கள் தமிழ்ச்செல்வன், முத்துலிங்கம், சந்திரமோகன், சோமசுந்தரம், சங்கர்,



கோபால், ரமேஷ், சிவராமன், சேகர், செல்வமணி, தனசேகரன், ஒன்றிய செயலாளர்கள் வெண்ணிலா சேகர், உமாசங்கர், மாணிக்கம், விஜயகுமார், ரத்தினவேல், ராஜேந்திரன், சக்கரவர்த்தி, மாதேஸ்வரன், மூர்த்தி, சிவராமன், மருதமுத்து, டாக்டர் செழியன், மணி, அழகுவேல், சித்தார்த்தன், பாலமுருகன், நகர செயலாளர்கள் பாலசுப்பிரமணியன், வேல்முருகன், பேரூர் செயலாளர்கள், மற்றும் மாவட்ட, ஒன்றிய, பேரூர், நகர, நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழகத்தின் துணை அமைப்பாளர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் BLA2 மற்றும் கழக முன்னோடிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:

தி.மு.க இளைஞர் அணியின் செயலாளராகத் கடந்த 2019ஆம் ஆண்டு ஜூலை 4ஆம் தேதி நியமிக்கப்பட்டது முதல் கழகத்தின் வெற்றிக்காகவும், மக்களின் நலனுக்காகவும் எண்ணற்ற பணிகள், புதிய இளைஞர்கள் வருகை, சிறுபான்மையினர் நலன், ஊரடங்கு கால மக்கள் பணி, குடியுரிமைச் சட்டம், நீட்தேர்வு ரத்துக்கு மாபெரும் கையெழுத்து இயக்கம் கல்வி உரிமை களம், பாசிசத்தை வீழ்த்திய செங்கல், போன்ற மக் கள் பிரச்சினைகளுக்கு குரல் கொடுத்த நம் இளம் தலைவர், 234 தொகுதிகளிலும் திராவிட மாடல் பயிற்சி பாசறைக் கூட்டம் நடத்திக் காட்டிய சரித்திர இளைஞர், நம் சேலம் கிழக்கு மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையத்தில் சுமார் 10 லட்சம் இளைஞர்களை திரட்டி இளைஞரணி 2வது மாநில மாநாட்டினை வெற்றிகரமாக நடத்தி காட்டியவர்,

அரசின் மற்ற துறைகளைப் போலவே விளையாட்டுத் துறையிலும் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக மாறிட துறையின் அமைச்சராக பல்வேறு திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார். அனைத்துச் சட்டமன்றத் தொகுதிகளிலும் முதலமைச்சரின் சிறு விளையாட்டரங்கங்கள், வீரர்களுக்கு உதவிட சாம்பியன்ஸ் அறக்கட்டளை, கேலோ இந்தியா போட்டி, தேசிய ஆடவர் ஹாக்கி போட்டி, முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகள் என தமிழ்நாடு விளையாட்டு துறையிலும் ஒளி வீசி வருகிறது.

நீண்ட நாள் கோரிக்கையான விளையாட்டு வீரர்கள் தங்கி பயிற்சி பெற தங்கும் விடுதி நம் சேலத்தில் அமைத்து தர ரூ.7கோடி மதிப்பீட்டில் 50 வீரர்கள் பயிற்சி பெறும் வகையில் ஸ்போர்ட்ஸ் ஹாஸ்டல் அமைக்க அனுமதி வழங்கியுள்ளார். இது போன்று பல்வேறு முன்னெடுப்புகளை செய்து கட்சி பணியிலும், மக்கள் பணியிலும் சிறப்பாக செயலாற்றி வரும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு நவம்பர் 27 அன்று பிறந்தநாள் விழா அன்று நம் சேலம் கிழக்கு மாவட்ட கழகத்திற்குட்பட்ட 2 நகரம், 16 ஒன்றியம், 15 பேரூர், 218 ஊராட்சிகள், 2199 கிளைகள், 279 வார்டு கிளைகள் ஆகிய அனைத்திலும் கழக கொடியேற்றுதல், தோரணங்கள் அமைத்தல், ஏழை எளியவருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல், அன்னதானம், இனிப்புகள் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு பணிகளை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும். என சேலம் கிழக்கு மாவட்ட கழகம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டன.

சேலம் கிழக்கு மாவட்ட கழகம் சார்பில் வாழப்பாடியில் உள்ள தளபதி மு. க. ஸ்டாலின் அறிவாலயம் கலைஞர் அரங்கில் அவசர செயற்குழு கூட்டம் நடைபெற்றது. இதில் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்.

### இராயபுரம் சட்டமன்றத் தொகுதியில்

## வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை!

### ஐட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ. மாநகராட்சி ஆணையரிடம் கோரிக்கை!

சென்னை, நவ.22-

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் ஆர்.மூர்த்தி சென்னை பெருநகர மாநகராட்சி ஆணையர் அவர்களிடம் வடகிழக்கு பருவமழையினால் ஏற்படும் சேதங்கள் தொடர்பாக முன்னேச்சரிக்கை நடவடிக்கைகளுக்காக 48, 49, 50, 51, 52, 53 ஆகிய வட்டங்களில் உள்ள அனைத்து தெருகளிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக மழைநீர் வடிகால் அமைத்து தரவும் மற்றும் இராயபுரம் தொகுதி 53வது வார்டு போஜராஜன் நகர் சுரங்கப் பாதை விரைவில் முடிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

மேலும் இராயபுரம் பொதுமக்கள் மிகவும் கூட்ட நெரிசலில் சிரமப்படுவதால் இராயபுரம் மன்னார் சாமி கோயில் சிக்னலிருந்து N4 காவல் நிலையம் வரை உயர் மட்ட மேம்பாலம் ஒன்று அமைத்து தர வேண்டியும் கோரிக்கை மனுவில் கேட்டுக் கொண்டார்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் விராலிமலை கிழக்கு ஒன்றியம் நாங்குப்பட்டியில் புதிய பகுதி நேர நியாய விலை கடையை மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் திறந்து வைத்து குடும்ப அட்டைதார்களுக்கு உணவு பொருட்கள் வழங்கினார். நிகழ்வில் ஒன்றிய செயலாளர் மு.பி.ம.சத்தியசீலன், பொதுக்குழு உறுப்பினர் தென்னலூர் எம்.பழனியப்பன், மாவட்ட கவுன்சிலர்கள் சாந்தி தங்கசிங்கம், கை.பழனிச்சாமி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் விளாப்பட்டி சிவா, ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ராஜா ஸ்டாலின் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் வருவாய்த்துறை கூட்டுறவுத்துறை அதிகாரிகள் பொதுமக்கள் பங்கேற்றனர்.